My services are 100% FREE
வீடு வாங்க விற்க
Para Tisi
"Don't wait to buy real estate. Buy real estate and wait."
Call Para 647.299.0599

30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 30 பாலம்: 16 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் August 15, 2020

## இலங்கையில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசை அமைக்கிறது

இலங்கையில் 16ஆவது நாடாளுமன்றத்திற்கான 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 2020 ஒகஸ்ற் 5இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 'ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி'யின் தலைமையில் (SLPP) 2019 ஒக்ரோபர் 31இல் 16 கட்சிகளுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட 'ஶ்ரீலங்கா பொதுஜன சுதந்திரக் கூட்டமைப்பு' (SLPFA) 145 ஆசனங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியுள்ளது.

இந்தக் கூட்டமைப்பில் இருந்துகொண்டு தனியாகப் போட்டியிட்ட EPDP, TMVP, SLFP மற்றும் NC கட்சிகள் மேலதிகமாக 5 ஆசனங்களையும் பெற்றுள்ளன. இதனால் SLPFA கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் அரசியல் அமைப்பை மாற்றக்கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குத் தேவையான 150 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

2020 பெப்பிரவரி 11இல் அங்கீகரிக்கப்பட்ட 'ஐக்கிய மக்கள் சக்தி கட்சி'யின் தலைமையில் போட்டியிட்ட 7 கட்சிகளின் கூட்டமைப்பு (SJB) 54 ஆசனங்களைப் பெற்றது. இந்தக் கூட்டமைப்பில் இருந்து கொண்டு தனியாகப் போட்டியிட்ட ACMC ஓர் ஆசனத்தைப் பெற்றது. இதனால் SJB கூட்டமைப்பு 55ஆசனங்களுடன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக அமர்கிறது.

இவற்றைவிட மீதி 20 ஆசனங்களில் 10 ஆசனங்களை தமிழரசுக் கட்சியின் (ITAK) தலைமையில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டணியும் (TNA), 3 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கட்சியும் (JJB), இரண்டு ஆசனங்களை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் (AITC) தலைமையில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் (TNPF) பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி, எங்கள் மக்கள் சக்தி கட்சி, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய ஐந்து கட்சிகளும் முறையே ஒவ்வொரு ஆசனங்களைப் பெற்றன.



ஒகஸ்ற் 5இல் நடைபெற்ற தேர்தலில் பதியப்பட்ட கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களுமாக 353 அமைப்புகள் நாடு முழுவதும் போட்டியிட்டன. இலங்கை முழுவதிலும் போட்டியிட்ட 313 சுயேட்சைக் குழுக்களில் எந்த ஒரு சுயேட்சைக் குழுவாதல் ஓர் ஆசனத்தையாவது பெறவில்லை. அதைவிட இந்த விகிதாசாரத் தேர்தலில் ஆசனம் வழங்கக் கருத்திற்கொள்ள ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு அது போட்டியிட்ட மாவட்டத்தில் குறைந்தது 5% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். போட்டியிட்ட 313 சுயேட்சைக் குழுவில் ஒன்றுகூட 5% வாக்குகளைப் பெறவில்லை.

சுயேச்சைக் குழு ஒன்று போட்டியிடமுன்னர் அக்குழுவில் உள்ள வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் 2 ஆயிரம் ரூபா கட்டுப்பணம் கட்டவேண்டும். இலங்கை முழுவதிலும் போட்டியிட்ட 313 சுயேட்சைக் குழுக்களில் இருந்த மொத்த வேட்பாளர்கள் 3,800 பேரும் தங்கள் கட்டுப் பணத்தை இழந்துள்ளனர்.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் 70 இருந்தாலும் அவை பல சேர்ந்தே போட்டியிட்டன. நாடு முழுவதும் போட்டியிட்ட 40 கட்சிகளில் 15 கட்சிகள் மட்டுமே இந்தத் தேர்தலில் ஆசனங்களைப் பெற்றன. 15 கட்சிகளின் பெயர்களையும் அவர்கள் பெற்ற ஆசனங்களையும் அட்டவணையில் காணலாம்.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றோர் 16,263,885 ஆவர். அவர்களில் 12,343,302 பேர் அதாவது 75.89%ஆனோர் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் 77.66%ஆனோர் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். ஜனநாயக தேர்தல் முறைகளில் மிகவும் சிறப்பானது எனக் கருதப்படும் விகிதாசார தேர்தல் முறையிலேயே இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறான விகிதாசாரத் தேர்தல் முறையில் ஒரு கட்சி மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெறுவது மிகவும் கடினம்.

கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடைபெறும் FPTP தேர்தல் முறையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவதற்கு அக்கட்சி மக்களின் பெரும்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
19 Years exp
Listing Deal!!
HALL OF FAME
Century 21 416-290 1200

Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com


DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104
email: uvakai100@gmail.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com
HOMELIFE

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721
Fax: 647-351-3099
mortgage@nesan.ca
www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com




# அயோத்தி – ராமர் பிறந்த புண்ணிய பூமி

விஷ்ணு பகவானின் ஏழாவது அவதார மான ராமர் பிறந்த இடம்தான் கங்கையின் துணை நதியான சரயு நதிக்கரையில் அமைந்துள்ள அயோத்தி நகரம். இந்த புண்ணிய பூமி ஏழு முக்தி தேசங்களில் ஒன்றாகவும் மற்றும் 108 திவ்விய தேசங்களில் ஒன்றாகவும் உள்ளது. இங்கு முக்கியமாகக் காணவேண்டிய இடங்கள் யாதெனில் - ராமர் கோயில் மற்றும் அந்த வளாகத்தில் அமைந்துள்ள சீதாவின் சமையல் அறை, கைகேகி பவன், கௌசல்யா அறை, சுமித்ரா அறை, லவ்குஷ் கோயில், கனக்பவன், அனுமான் கோயில், சிவனுக்கு அற்பணிக்கப்பட்ட நாகேஷ்வர்நாத் கோயில் மற்றும் இராமருக்கு பட்டாபிஷேகம் நடந்த மண்டபம்.

புராணத்துடன் தொடர்புடைய ராமரின் இராச்சியமான அயோத்தி 500 ஆண்டு களாக இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக் கும் இடையில் சர்ச்சைக்கு உட்பட்டு இருந்தது. இந்த நிலத் தகராறு 5 ஒகஸ்ற் 2020ஆம் ஆண்டு முடிவுக்கு வந்துள்ளது. அவற்றைப்பற்றிய சுருக்கமான வரலாறு பின்வருமாறு. 1528ஆம் ஆண்டில் ராமர் பிறந்த இடத்தில் முகலாய பேரரசர் பாபரால் ஒரு மசூதி கட்டப்பட்டது. 1859ஆம் ஆண்டு சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட இந்த மசூதிக்கு இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது பிரிட்டிஷ் நிர்வாகம் முஸ்லீம் வழிபாட்டாளர்களை மசூதிக்குள் தொழுகை செய்யவும் இந்துக்களை விவாதத்துக்குரிய இடத்திற்கு வெளியே இருந்து வழிபடவும் மற்றும் பூஜைகள் செய்யவும் ஆணையிட்டது.



இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தபின் இந்துக்கள் இந்த இடத்தை தங்கள் சமூகத்திற்குத் திருப்பித் தருமாறு கோரினர். மேலும் 1949ஆம் ஆண்டு மசூதியின் உள்ளே ராமர் மற்றும் சீத்தாவின் சிலைகளை வைத்து தினசரி வழிபாடு செய்ய தொடங்கினர். இதனால் ஏற்பட்ட பதற்றத்தை தடுக்க நீதிமன்றம் தலையிட்டு மசூதியின் வாயில்களை பூட்டி வழிபாட்டுக்குத் தடை செய்தனர். பின்னர், 1986ஆம் ஆண்டில் இந்துக்கள் வழிபடு வதற்காக மசூதியை திறக்கும்மாறு நீதி மன்றம் உத்தரவிட்டது. இதன் பின்னர் பல ஆண்டுகளாக இந்துக்களும் முஸ்லீம் களும் இந்த இடத்தின் உரிமைகோரி சட்டமன்றத்தை நாடினர். 1992ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள், நாட்டின் எல்லா பகுதியிலும் இருந்து வந்த இந்து பக்தர்கள் ராமர் பிறந்த இடத்தில் பாபர் ஆட்சிக் காலத்தில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட மசூதியை இடித்து தரை மட்டமாக்கினர். இதனால் ஏற்பட்ட மதக் கலவரத்தினால் இரண்டாயிரத்துக்கும் மேற் பட்டோர் பலியாகினர். இதன் விளைவாக அரசாங்கம் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி லிப்ரான் தலைமையில் ஒரு ஆணையத்தை அமைத்தது. இந்த ஆணையம் தனது அறிக்கையை 2009ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது.

பின்னர் நவம்பர் 09, 2019ஆம் ஆண்டு, உச்சநீதிமன்றம் இறுதி தீர்ப்பை வழங்கியதுடன், சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்டுவதற்கு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. இதன் விளைவாக ஒகஸ்ற் 5ஆம் திகதி 2020ஆம் ஆண்டு, பாரத பிரதமர் நரேந்திர தாஸ் மோடி 22.6 கிலோ எடைகொண்ட வெள்ளி செங் கல்லை அஸ்த்திவாரத்தில் வைத்து கோயில் கட்டுமான பணியைத் தெடங்கியதுடன் தனது சிறப்புரையில் பல கோடி இந்து பக்தர்களின் கனவு நினைவு ஆகி விட்டது என்று குறிப்பிட்டு இருந்தார்.

மேலும் ராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் மற்றும் நாட்டின் பல்வேறு புண்ணிய ஸ்தலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தம் மற்றும் மணல்கள் கோயில் அஸ்த்திவாரத்தில் இடப்பட்டது. இது தவிர 30 ஆண்டுகளுக்கு முன்பு, ராமரின் பக்தர்களால் நாடு முழுவதிலுமிருந்து சேகரிக்கப்பட்ட, ஸ்ரீ ராம் என்று பெயர் பொறித்த இரண்டு லட்சத்துக்கும் மேற் பட்ட செங்கல்களும் கோயிலின் அடித் தளத்தில் பயன்படுத்தப்படும். ராமர் கோயில் 67 ஏக்கர் பரப்பளவில் 161 அடி உயரத்துடனும் 141 அடி அகலத்துடனும், மூன்று தளங்கள், 360 தூண்கள் மற்றும் ஐந்து குவிமாடங்களையும் கொண்டு நாகரா கட்டிடக்கலை பாணியில் இரும்பு கம்பிகள் பயன்படுத்தாமல் மூன்று ஆண்டுகளில் 300 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும். கோயில் கர்ப்பகிரகத்தில் குழந்தை ராமரின் (ராம்-லாலா) சிலை வைக்கப்படும்.

டெல்லியில் இருந்து விமானம் அல்லது வாகனம் மூலம் அயோத்திக்கு செல்ல லாம். அயோத்தியைச் சுற்றிப்பார்ப்பதற்கு ஒரு நாள் போதுமானது. அயோத்தி பயணம் மேற்கொள்ளும் பக்தர்கள் வழியில் நேமிச்சரண்யம் (திவ்ய தேசம்), அலகாபாத், காசி மற்றும் கயா செல்வதும் வழக்கம். இவை எல்லா இடங்களையும் காண்பதற்கு ஏழு நாட்கள் போதுமானது.



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715




# இலங்கையின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

| இலங்கைப் பொதுத் தேர்தல் -2020 | | | |
|---|---|---|---|
| கட்சிகளும் கூட்டணிகளும் | பெற்ற வாக்குகள் | வாக்கு வீதம் | உறுப்பினர்கள் எண்ணிக்கை |
| 1. சிறீலங்கா பொதுஜன முன்னணி - SLPP | 6,853,690 | 59.09% | 145 |
| 2. ஐக்கிய மக்கள் சக்தி - SJB | 2,771,980 | 23.90% | 54 |
| 3. இலங்கை தமிழ் அரசு கட்சி - ITAK | 327,168 | 2.82% | 10 |
| 4. தேசிய மக்கள் சக்தி - JJB | 445,958 | 3.84% | 3 |
| 5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் -AITC | 67,766 | 0.58% | 2 |
| 6. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - EPDP | 61,464 | 0.53% | 2 |
| 7. ஐக்கிய தேசியக் கட்சி -UNP | 249,435 | 2.15% | 1 |
| 8. எங்கள் மக்கள் சக்தி கட்சி -OPPP | 67,758 | 0.58% | 1 |
| 9. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் -TMVP | 67,692 | 0.58% | 1 |
| 10. சிறீலங்கா சுதந்திரக் கட்சி -SLFP | 66,579 | 0.57% | 1 |
| 11. முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு - MNA | 55,981 | 0.48% | 1 |
| 12. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி - TMTK | 51,301 | 0.44% | 1 |
| 13. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - ACMC | 43,319 | 0.37% | 1 |
| 14. தேசியக் காங்கிரஸ் - NC | 39,272 | 0.34% | 1 |
| 15. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - SLMC | 34,428 | 0.30% | 1 |
| ஏனைய கட்சிகள்/கூட்டணிகள் | 395,138 | 3.41% | 0 |
| Total Valid Votes: | 11,598,929 | 71.32% | |
| Rejected Votes: | 744,373 | 4.58% | |
| Total Polled: | 12,343,302 | 75.89% | |
| Total Electors: | 16,263,885 | | 225 |

பான்மை வாக்குகளைப் பெற்றிருக்கத் தேவையில்லை. ஆனால் விகிதாசாரத் தேர்தல் முறையில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெற ஒரு கட்சி மக்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை ஏறத்தாழப் பெற்றிருக்க வேண்டும். இதனாலேயே இவ்வாறான தேர்தல் முறையை சிறப்பான ஜனநாயகத் தேர்தல் முறை என அரசியல் வல்லுனர் கூறுகின்றனர்.

இலங்கையில் இம்முறை நடைபெற்ற தேர்தலில் SLPP இன் தலைமையில் போட்டியிட்ட SLPFA கூட்டமைப்பு 7 மில்லியனுக்கு மேற்பட்ட (61%) வாக்கு களைப் பெற்று மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களையும் பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது.

புதிய கட்சியான SJB கூட்டமைப்பு உருவாகி ஒருவருடம் கூட ஆகாத நிலையில் 2.8 மில்லியனுக்கும் (24%) மேற்பட்ட வாக்குகளைப் பெற்று 55 ஆசனங்களையும் பெற்று சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது.



இலங்கையில் 73 வருடங்கள் பழமை வாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சி என்று மில்லாதவாறு இம்முறை ஓர் ஆசனத்தை மட்டுமே பெற்றுள்ளது. அத்துடன் 1977ஆம் ஆண்டில் இருந்து இலங்கை நாடாளுமன்றத்தின் உறுப்பினராகப் பதவி வகித்துவந்த ரணில் விக்கிரமசிங்க இம்முறை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

SLPP கட்சியின் தலைவரும் 74 வயது நிரம்பியவருமான மஹிந்த ராஜபக்ச 50 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசியலில் ஈடுபட்டு வருகிறார். அவர் 1970ஆம் ஆண்டில் 24 வயதாக இருக்கும் போதே நாடாளுமன்றத்துக்குத் தெரிவான வர். அவர் இம்முறை 500,000க்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார். அவர் இம்முறை பெற்ற விருப்பு வாக்குகளே இலங்கையின் விகிதாசாரத் தேர்தல் வரலாற்றில் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகளாகும். இரண்டு முறை இலங்கையின் அதிபராக வும் மூன்று முறை இலங்கையின் பிரதமராகவும் இருந்த மஹிந்த ராஜபக்ச 2020 ஓகஸ்ற் 9இல் 4ஆவது தடவை இலங்கையின் பிரதமராக அனுராதபுரத் தில் உள்ள களனி ரஜமகா விகாரையில் இலங்கையின் அதிபர் கோட்டபாய ராஜபக்ச முன்னிலையில் சத்தியப்பிர மாணம் செய்து பதவியேற்றார்.

“இலங்கை அதிபர் கோட்டபாய ராஜபக்ச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுட னான ஆட்சிக் காலத்தில் இலங்கை முன்நோக்கிப் பயணிக்கும் என்பதை நான்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# நாமும் நமது இல்லமும் 564

## ரொறொன்ரோவில் ஆதனங்களின் விலையில் அதிகரிப்பு தொடருமா?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2017 ஏப்பிரலில் சராசரி ஆதன விலை $920,791ஆக அதிகரித்தபோது அன்றைய அரசு புதிய இறுக்கமான சட்டங்களைக் கொண்டுவந்து மேலதிக விலை அதிகரிப்பிற்கு முட்டுகட்டை போட்டது. தொடர்ச்சியாக வியாபாரத்தில் இறுக்கம் ஏற்பட்டது. ஆண்டு 2019இல் மீண்டும் நிலைமை மாறி விலை சிறிது சிறிதாக அதிகரிக்கத் தொடங்கியது.

எதிர்பாரதவிதமாக கோவிட்-19இன் பாதிப் பால் மார்ச் 18, 2020இலிருந்து கனேடிய மக்கள் வீட்டுக்குள் அடைபட்டனர். இதனால் ஆதன வியாபாரமும் முடக்கம் கண்டது. முன் எப்போதும் காணாத நிலைமையை காணக்கூடியதாக இருந்தது.

கோவிட்-19, ஆதன வியாபாரத்தில், மீண்டும் நிலைமையை மாற்றியது. ஏப்பிரல் 2020, ஆதன வியாபாரத்தில் ஒரு கறுப்பு மாதமாகக் கருதப்படுகின்றது. இப்போது நிலைமை மாறுகின்றது. மீண்டும் விலையில் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது.

குறைவான ஆதனங்களே விற்பனைக்கு வருவதும் ஒரு முக்கிய காரணமாகலாம். எனினும் $1மில்லியனுக்கும் குறைவான விலை உள்ள ஆதனங்கள் போட்டியி னால் மேலதிக விலைக்கு விற்கப்படுகின் றன. 2017இற்கு முன்பாக $800,000 இற்குக் குறைவான விலையில் காணப்பட்ட ஆதனங்களே போட்டியில் விற்கப்பட்டன. அடமானக் கடன் மற்றும் கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தில் குறிப்பிடக்கூடிய இறக்கம் ஏற்பட்டதனால், ஆதனம் வாங்கு வோரும் தமது வாங்கும் எல்லையை ஒரு (1) மில்லியனாக ஆக அதிகரித்துள்ள தனைக் காணலாம்.

ஜுலை 2020இல் ஆதனங்களின் விற்ப னையின் விலையில் எதிர்பாராத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கோவிட்-19இற்குப் பின்னால் முதல் தடவையாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிகளவு ஆதனம் வாங்குபவர்களால் இந்நிலைமை ஏற்பட்டதனை காணக்கூடியதாக உள்ளது. கோவிட்-19இற்குப் பின்னால் ஏப்ரல் 2020 இல் மிகப்பெரிய மாற்றம் ஆதன வியாபாரத்தில் ஏற்பட்டது.

ஏப்ரல் 2020 ஏற்பட்ட நிலைமை, சிறிது சிறிதாக மாற்றம் பெற்று 2020 ஜுலையில் முற்றாக மாறியதைக் காணக்கூடியதாக உள்ளது.

எதிர்பாராத நிலைமையாக ஜுலை 2020 இல் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் சராசரி ஆதனவிலை முன்னைய ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடும்போது 11.9% இனால் அதிகரித்து $930,869 ஆகக் காணப்படுகிறது

இவ்வாறு கனேடியர் போட்டி போட்டு ஆதனம் வாங்குவதற்கு என்ன காரணமாகலாம்.

அரசின் உதவிகள் பெறுவோரின் நிலைப் பாட்டில் பிழையான எண்ணத்தைத் தோற்று வித்திருக்குமா? என்ற கேள்வி ஆய்வாளரி டம் ஏற்பட்டுள்ளது. அரச உதவிகள் நிறுத்தப்பட்டபின் மக்கள் மீண்டும் தொழிலுக்குச் செல்லக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமா? என்ற கேள்வியும் ஏற்படுகிறது.

ஆதன விலையில் இன்றும் ரொறொன்ரோ வின் பெரும்பாகத்தின் சில பகுதிகளில் 2017ஆம் ஆண்டில் வாங்கிய விலையை விடக் குறைந்த விலையில் ஆதனங்களை கைமாறுவதைக் காணலாம். சில பகுதிகளில் போட்டியுடன் வியாபாரம் நடந்தாலும், சில பகுதிகளில் மந்தமாகவே காணப்படு கின்றது. பலவிதமான நிலைப்பாடுகள் எதிர்கால ஆதன வியாபாரத்தில் மாற்றங் களை ஏற்படுத்தலாம். உதாரணமாக புதிய குடிவரவாளர்களின் வருகை, பல்கலைக் கழகங்கள் On -Lineஇல் வகுப்புகள் ஆரம் பிப்பதால் மாணவர்கள் கனடாவிற்கு (குறிப்பாக ரொறொன்ரோவிற்கு) வருவோ ரின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படலாம். பிரயாணத்திற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள், மத்தியஅரசு மற்றும் மாநில அரசின் அதிகப்படியான கடன் தொகை என்பன எதிர்காலப் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

இவற்றின் பாதிப்பு ஆதார வியாபாரத்தில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே பொருளாதார எதிர்வு கூறுவோ ரின் கருத்தாகக் காணப்படுகின்றது. இவற்றின் உண்மையான நிலைமை புதுவருடத்திலேதான் தெரியவரும்.

### அலுவலகக் கட்டிடம் அடுக்கு மனையாக மாறலாம்!

இன்றைய நிலையில் (August 15, 2020), கோவிட்-19இன் தாக்கத்தால் அடுக்கு மாடிக் கட்டிடங்களில் உள்ள அலுவல கங்கள் அநேகமானவை பாவிக்கப்படாமல் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இந்நிலைமை எவ்வளவு காலம் தொடரலாம்? இந்த நிலைமை எவ்வளவு காலம் தொடரலாம் என்பதற்கு தகுந்த பதில் கொடுக்கக்கூடிய நிலையில் ஒருவரும் இல்லை. ஒவ்வொரு வரும் தமக்கு விரும்பிய முறையில் கூறிக் கொண்டு வருகின்றனர். ஆனால் இந்த கட்டிட தொகுதிகளிற்குரிய மாதாந்த செலவுகள் உள்ள மாதிரியே உள்ளன. அதாவது மாறாமலே இருக்கின்றது. இதன் உரிமையாளர்களால், எவ்வளவு காலம் தான் தமது மாதந்தக் கொடுப்பனவுகளை செய்ய முடியும். அவர்களுக்குள்ள மாற்றுத் திட்டங்களில் ஒன்றாக இந்தக் கட்டிடத் தொகுதிகளை வெவ்வேறுவித மான தேவைகளுக்காகப் பாவிப்பதற்கான முறைகளை ஆராய்தல். இதன் ஒரு விரும்புவர். ஒரு முதலீட்டாளர் தமது பணத்தை முதலிடும்போது அதற்குரிய வருமானம் வருவதில் மிகவும் கவனமாக இருப்பார்.

அத்துடன் இன்றைய நிலைமையில், கோவிட்-19இற்கு முன்னைய சுமுகமான நிலைமையை அடைய குறைந்தது இரண்டு வருடங்களுக்கு மேலாகலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.ஆனால் ஓர் அலுவலகக் கட்டிடத்தை, அடுக்கு மனை கட்டிடத்தொகுதியாக மாற்றுவதற்கு



முறையாக இந்தக் கட்டிடத்தொகுதியை அடுக்குமாடி மனையாக மாற்றும் நிலைமை ஏற்படலாம். குறிப்பாக ரொறொன்ரோ, வன்கூவர் மற்றும் ஹல்கரி போன்ற இடங்களில் உள்ள அலுவலக கட்டிடத்தொகுதிகளுக்கு முன் நிலைமை கொடுக்கப்படலாம், எனினும் இவ்வாறு மாற்றுவதற்கு சில சிக்கல்கள்/ இன்னல்கள் ஏற்படலாம்.

பொதுவாக, இன்றைய அடுக்குமாடிக் கட்டிடத்தில் ஒவ்வொரு மாடியிலும் அனேகமாக 10-12 மனைகள் காணப்படும். இதையே கட்டிட முதலீட்டாளர்களும் இதைவிடக் குறைந்த காலமே எடுக்கலாம். குறித்த நகரங்கள் மற்றும் பிரதேச சபையின் அங்கத்தவர்கள் நியாயமான விட்டுக்கொடுப்பனவு செய்து, மிகக் குறுகிய காலத்தில், தேவையான அனுமதி களை வழங்கினால், இவ்வாறான மாற்றங்கள் இலகுவாகலாம். இதற்குத் தகுந்த முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என்பதே இன்றைய நிலமை. மற்றும் மூன்று அடுக்கு அரசுகளும், முதலீட்டாளர்களுக்குப் போதியளவு உறு துணையாக இருந்தால் மட்டுமே இது உண்மையாகலாம்.

## ஆணுக்குப் பெண் நிகரன்றோ...!

ஆணுக்குப் பெண்ணவள் நிகரன்றோ
ஆளுமையிலும் அவள் சமனண்றோ
பாணுக்குப் பருப்புச் சுவையன்றோ
பாரினில் இருவரும் இணையன்றோ!

கல்வியும் தொழிலும் கடமைகளும்
கனவினுறு பெண்ணுக்கு உண்டன்றோ
பல்வகை கலைகளும் பட்டங்களும்
பாவையர் தமக்கும் சிறப்பன்றோ


சொல்லிலும் செயலிலும் வீரத்திலும்
சோதனை காணும் நேரத்திலும்
துல்லியமாக ஆணுடன் இணைந்து
துணிவுடன் நிற்பவள் பெண்ணன்றோ!

ஆண்களுக்கான அனைத்துத் தொழிலிலும்
அரியவர் தாமும் இணைந்து கொண்டே
மண்ணிலே அவர்செய்யும் சாகசங்கள்
மனதை வருடவரும் வாசகங்கள்

மருத்துவர் பேராசிரியர் மதிப்புமிகு தாதியர்
மரியாதைக்குரிய நீதிபதிகள் சட்டத்தரணிகள்
பேருந்து ஓட்டுகின்ற சாரதிகளின்னும்
பெருமைமிகு நாடாளும் அமைச்சர்கள்

விமானத்தில் பணிசெய்யும் பணிப்பெண்கள்
விண்ணில் ஆய்வுசெய்யும் விஞ்ஞானிகள்
தாமாக முயன்று பல்தொழில் செய்திடும்
தகைமைகளைப் பெற்றவரும் பெண்ணன்றோ!

அடுப்பங்கரையே தஞ்சமென்று அந்நாளில்
அம்மியும் குழவியும் அரையலுமாய்
இடுப்பொடிய வீட்டினுள்ளே வேலைசெய்தே




உலகப் பெண்கள் சமத்துவத்தினம் 26.08.2020

இருளினில் வாழ்ந்தவர் பெருமையுற்றார்

நாகரிகம் வளர்ச்சிபெற்ற காரணத்தால்
நகரும்நம் வாழ்வில் நாம் அறியாமலே
வேகமுடன் மாற்றங்கள் மலர்ந்திங்கு
வேர்விட்டு விருட்சமாய் மாறியதே

பாரதிகாண விழைந்த புதுமைப்பெண்கள்
பாரினிலின்று வாழ்கிறார் இதுஉண்மை
ஏரதுகண்ட நிலத்தினைப்போல் பெண்கள்
ஏற்றம்பெற்று வாழ்வது உண்மை!

ஆணுக்கு பெண்ணும் சமந்தானெனும்
ஆற்றல் மிகுந்தால் உயர்வுண்டே
வீணுக்குச் சேறள்ளிப் பூசல்விட்டு
விவேகத்தின் துணை கொண்டு வாழ்தல் நன்றே!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# வடமாகாணக் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கான சில பின்னணிகளும் ஆலோசனைகளும்

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

**பகுதி–5** இன் தொடர்ச்சி

தென் மாகாணசபையின் கீழ்வரும் மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் இன்று கல்வித் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் முன்னிலையில் இருந்து வருகின்றன. இதனைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்காகத் தென்மாகாணக் கல்வி அமைச்சு பின்வரும் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருவதுடன், அந்த நடைமுறைகளைச் சகல அதிபர்களும், ஆசிரியர்களும், கோட்டக்கல்வி அதிகாரிகளும், கல்விப்பணிப்பாளர்களும் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதால் குறுகிய காலத்தில் தென் மாகாணம் வடக்குக் கிழக்கு மாகாணங்களை விட மிக உயர்ந்த நிலைக்கு முன்னேறியது.

*தென்மாகாணக் கல்வி அமைச்சின் பிரதானமான செயற்பாடாக இருப்பது தங்களுக்கென ஒரு கல்விக் கொள்கையை உருவாக்கி அதற்கு ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமையால் அதனை மீறி எவரும் செயற்பட முடியாது. மாகாணத்திற்கான கல்விக் கொள்கையை தயாரிக்கும் பொழுது, தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாகவே தயாரிக்கப்படுகின்றது.

- பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பாடசாலைக் கற்றல், கற்பித்தலை வினைத்திறனாக்கும் வகையிலான பாடசாலை மேற்பார்வைகள், அவற்றின் மீளாய்வுகளும், பின்னூட்டலும் மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்று வருடாந்த அமலாக்கல் திட்டம் தயாரித்து அது பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது விடயமாக வடமாகாணத்தில் உள்ள சில அதிபர்கள் "வருடாந்த அமலாக்கல் திட்டம்" தவறாமல் தயாரித்து அழகாகக் கோவைப்படுத்தி வைப்பதாகவும், ஆனால் அவை "அமலாக்காத் திட்டமாகவே" இருக்கும் என்றும் வேடிக்கையாகக் கூறுவர்.

- இதுபோன்றே மாகாணத்திற்கான கல்விக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கேற்ப ஒவ்வொரு பாடத்திற்கும் வருடாந்த அமலாக்கல் திட்டம் தயாரித்து அதில் ஒவ்வொரு பாட ஆசிரியர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதற்கு கோட்டக் கல்வி அதிகாரிகள் நேரடியாகப் பொறுப்பாக இருப்பதால் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு ஆசிரியரும் தமது பாடத்திலான அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதால், தமது பாடத்தின் உயர்ச்சி அல்லது வீழ்ச்சிக்கு அவர்களே வகை கூறக் கூடியவர்களாகவும் (Accountability) உள்ளனர்.



- கண்காணிப்பு, மற்றும் அமலாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அவை தொடர்பான முன்னேற்றங்களை மீளாய்வு (Progress Review) செய்தல் ஆகியவை மாகாணக் கல்வித் திணைக்களத்தினதும், வலயக்கல்விப் பணிமனைகளினதும், கோட்டக்கல்வி அலுவலகங்களினதும் பொறுப்பாக உள்ள அதே நேரத்தில் இவை தொடர்பான ஒரு பிரிவு கல்வி அமைச்சில் இயங்குவதால், அதற்கு இந்த அறிக்கைகள் கையளிக்கப்பட வேண்டும். தென்மாகாணத்தில் கல்விச் செயலாளருக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் இடையில் நல்லுறவு பேணப்படுவதால், பிரச்சினைகள் எதுவும் இன்றி அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமான அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் கிரமமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இவ்வாறான பயிற்சிகளைப் பெற்றோர் தமது பொறுப்புக்களைச் சிறப்பாகச் செய்வது தொடர்பான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

- கல்விப்புலத்தில் உள்ளோர் தொடர்பாக ஒழுக்காற்று விதிமுறைகள் மற்றும் சட்ட விவகாரங்கள் தொடர்பாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- கோட்டக்கல்வி அதிகாரிகளாக இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களே திறமை அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவியாகத் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டியும் தரவுகளை ஆய்வு செய்தும் கல்வி நிர்வாக சேவை அலுவலருக்குக் கையளிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் வடமாகாணத்தில் அதிபர் சேவையைச் சேர்ந்தோரே கோட்டக்கல்வி அலுவலர்களாகவும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இதனால் பல பாடசாலைகளில் இருந்து தரமான முதலாம் தர அதிபர்கள் அகற்றப்பட்டதால், பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

- தென்மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரம் கோட்டக்கல்வி அலுவக மட்டத்திற்குப் பரவலாக்கப் பட்டமையால், சில தீர்மானங்களை எடுப்பதற்கு கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

- தென்மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்துச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களின் நிர்வாக ஆளுகைக்குள்ளேயே கொண்டு வரப்பட்டதால், அவர்கள் கோட்டக்கல்வி அலுவலர்களுக்கே வகை கூற வேண்டியோராக உள்ளனர்.

- தென்மாகாணத்தின் மாணவர் ஆசிரியர் விகிதமானது 18இற்கு 1 என்ற வகையில் இருந்த போதும், ஆசிரியர்களுக்கான வேலைப் பகிர்வுகளும், பொறுப்புக்களும் திட்டமிட்ட முறையில் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை ஆசிரியர் நியமனங்கள் தேவையின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்ற அதே நேரத்தில் தொண்டர் ஆசிரியர்கள் எவரும் நியமனம் செய்யப்படுவதில்லை.

- தென்மாகாணத்தில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அத்துடன் ஆசிரியர்கள் இடமாற்றம் சட்ட ரீதியாகவும் பாரபட்சமின்றியும், அரசியல் தலையீடுகள் மற்றும் தொழிற்சங்கங்களின் தலையீடுகள் இன்றியும் இடம்பெறுகின்றன.

- ஓர் ஆசிரியர் அடுத்த பதினைந்து வருடத்திற்கு எந்த பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது முன்னரேயே தீர்மானிக்கப்பட்டு, அவை தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்படுகின்றது. இவ்வாறான தீர்மானங்கள் மூலம் ஆசிரியர்கள் விரக்தி அடையாது பொறுமையாக இருந்து, தமது கடமைகளை ஆற்றவும் உரிய காலத்தில் தமது இடமாற்றம் தொடர்பாகத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றது. இதன்மூலம் சகல ஆசிரியர்களுக்கும் பொதுவான இடமாற்றக் கொள்கை வகுக்கப்பட்டதால், ஆசிரியர்கள் தமது கடமைகளைச் சிறப்பாகவும், திருப்தியாகவும் செய்கின்றனர். ஆசிரியர் இடமாற்றக் கொள்கையும், மாகாணப் பொதுக் கொள்கைக்கு அமைவாகவே வகுக்கப்படுகின்றது.

- கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயல்திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்களிடையே கோட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் அங்கே பெற்றோரின் ஈடுபாடும், பங்கேற்பும் அதிகமாகக் காணப்படுகின்றன.

- இதனை வழிப்படுத்துவதில் தென் மாகாண முதலமைச்சர், மாகாணக் கல்வி அமைச்சர் ஆகியோர் நேரடியாகப் பாடசாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கான ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருகின்றனர். வடமாகாணத்தில் காணப்பட்டது போன்று முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களிடையே உட்கட்சிப் பூசல்கள் ஏற்படுவதில்லை எனவும், சபையின் உறுப்பினர்களுக்கிடையிலான புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் தன்மையும், ஒரே தலைமைத்துவத்தின் கீழ் கட்டுப்படும் தன்மையும் காணப்படுவதால், கல்வி அபிவிருத்தியில் உச்சத்தைத் தொட்ட ஒரு மாகாணமாக தென்மாகாணம் விளங்குகின்றது.

கல்வி அபிவிருத்தித் திட்டங்களை சகல உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தி வருவதாலேயே தென் மாகாணத்தின் கல்வித்தரத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான காரணம் என்று குறிப்பிடப்படுகின்றது. தென் மாகாணத்தின் கல்வி அடைவு தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவும், அங்கே மாகாணக்கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை அவதானித்து அதில் உள்ள சிறப்பம்சங்களைத் தமது பாடசாலைகளில் பிரயோகிப்பதற்கும் வடமாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சில கல்வி அலுவலர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் சென்று வந்திருக்கின்றனர்.

அதேபோன்று, கடந்த பல வருடங்களாக மிகப்பெரும் தொகையான பணச் செலவில் பல அதிபர்களும், கல்வி அலுவலர்களும்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்!




தமிழ் தேசிய அரசியலின் பாரிய பின்னடைவிற்கு ஒற்றுமையின்மையே காரணம் என்பதை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்த முடிவுகள் யாருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. இது எதிர்பார்த்ததுதான்.


வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 16 ஆசனங்களை வென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 10 ஆசனங்களை மட்டுமே (ஒரு மேலதிக ஆசனத்துடன்) பெற்றுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்று அணியென்ற முழக்கத்துடன் களமிறங்கிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆசனங்களை (ஒரு மேலதிக ஆசனத்துடன்) மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. தாங்கள்தான் உண்மையான மாற்று அணி என்று கூறி வந்த முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒரேயொரு ஆசனத்தை மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளது.

இறுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏகப் பிரதிநித்துவம் இல்லாமல் போனதுடன் மாற்று அணி என்பதும் இல்லாமல் போயுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கை சின்னத்தில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அதி கூடிய விருப்பு வாக்குகளுடன் வெற்றிபெற்றுள்ளார். இது ஆச்சரியமான விடயம்தான். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் கூடுதல் வாக்குகள் பெற்ற சிவஞானம் சிறீதரன் பெற்ற வாக்குகளிலும் பார்க்க அங்கஜன் பெற்ற வாக்குகள் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது (அங்கஜன் இராமநாதன் 36,365 வாக்குகள். சிவஞானம் சிறீதரன் 35,884 வாக்குகள்)

ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தா வழமையான ஓர் ஆசனத்தை மட்டுமே இம்முறையும் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வன்னியிலும் அவரது கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்துள்ளது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் விஜயகலா மகேஸ்வரனுக்கு கிடைக்கும் வாக்குகள் அதிகமாக அவரது ஊரான காரைநகரைச் சேர்ந்தவர்களுடையதாகவே இருக்கும். அத்துடன் காலம் சென்ற அவரது கணவர் மகேஸ்வரனுக்கு இருந்த ஆதரவும் அனுதாபமும் விஜயகலாவை கடந்த



தேர்தல்களில் வெற்றிபெறச் செய்திருந்தது. இம்முறை அவரும் தோல்வியடைந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் பாரிய வரலாற்றுத் தோல்விக்குள் விஜயகலாவும் கரைந்து போனார் என்றுதான் கூற வேண்டும்.

இப்போது தமிழ் தேசிய அரசியலுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவிற்கு தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டும். அவர்களின் ஒற்றுமையின்மைக்கு தமிழ் மக்களால் வழங்கப்பட்ட தண்டனை இதுவென்பதை அவர்கள் உணர வேண்டும். ஆனால், அதனை அவர்கள் இப்போதும் உணர்வதாகத் தெரியவில்லை. தங்களின் பின்னடைவிற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனை சரிப்படுத்திக் கொள்ள வேண்டும், கட்சியை சீரமைக்க வேண்டும் என்று அவர்கள் கூறுவதெல்லாம் வாயளவிலான கூற்றுத்தான்.

தேர்தலின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் மேலும் முரண்பாடுகள் வளர்ந்து வருவதை தற்போது அவதானிக்க முடிகின்றது. கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக தம்மைக் கூறிக் கொள்ளும் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் பாரிய கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

தேர்தல் காலத்தில் அக்கட்சிக்குள்ளேயே எதிரெதிரான பிரச்சாரங்கள் இரகசியமாகவும் சில வேளைகளில் வெளிப்படையாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகன் உள்ளிட்ட குழுவினர் சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம் என வீடுவீடாகச் சென்று பரப்புரை செய்ததாக சுமந்திரன் தற்போது தெரிவித்து வருகின்றார். தேர்தலின் பின்னர், அவரிடம் நேர்காணலை நடத்தி வருகின்ற ஊடகங்களிடம் சுமந்திரன் இதனை வெளிப்படுத்தி வருகின்றார். தேர்தல் காலத்தில் கட்சியை பாதிக்கும் என்பதால் இதனை தாம் வெளிப்படுத்தாமல் இருந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில் தன்னைப் பற்றி தவறான செய்தியை பிரசுரித்திருந்தமை குறித்து அப்பத்திரிகையின் உரிமையாளரும் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சரவணபவன் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழரசு கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவிடம் தான் அப்போது கோரியதாகவும், அவர் அதற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் சுமந்திரன் கூறுகின்றார். இவ்வாறு தமிழரசுக் கட்சிக்குள் முரண்பாடுகள் மேலும் வளர்ந்த வண்ணமே உள்ளன.

கூட்டமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் அம்பாறைக்கு வழங்கப்பட்டமை நியாயமானதே. ஆனால் அதற்கும் எதிர்ப்புகள் கட்சிக்குள்ளிருந்து வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனை தோல்வியுற்ற மாவை சேனாதிராஜாவிற்கு வழங்க வேண்டும் என்று கட்சிக்குள் ஒரு தரப்பு கூறுகின்றது. மாவை சேனாதிராஜாவும் அதனை எதிர்பார்ப்பதாகவே தெரிகின்றது. உண்மையில் தேசியப் பட்டியல் ஆசனத்தை தான் விரும்பவில்லை என்றும், புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள கட்சிக் கிளை அமைப்புகள் அதனை விரும்புவதாகவும், தான் சசிகலா ரவிராஜிற்கு வழங்க வேண்டும் என்று விரும்பியதாகவும் மாவை சேனாதிராஜாவே அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

தமிழரசுக் கட்சிக்குள் சீ.வி.கே சிவஞானம் மாவை சோதிராஜாவிற்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்பதை அதிகம் வலியுறுத்தி வந்துள்ளார். இது குறித்து கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் என்னிடம் கதைக்கும் போது சுவாரஸ்யமான கருத்தொன்றை கூறினார். "மாவைக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்க வேண்டும் என்று சீ.வி.கே கூறுவதற்கு உள்நோக்கமுள்ளது. அடுத்து வரப்போகும் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கும் ஆசை சீ.வி.கே இற்கு உள்ளது. மாவைக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கி விட்டால் மாகாண சபையில் களமிறங்க தனக்கு சிக்கல் இருக்காது என்பதே சீ.வி.கேயின் எண்ணம்" என்று அவர் கூறினார். முரண்பாடுகள் மட்டுமல்ல தந்திரோபாயங்களும், சுயநலன்களும் கூட தமிழரசுக் கட்சிக்குள் புதைந்துபோயுள்ளது என்பது உண்மைதான்.

தேர்தலின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாகவுள்ள ரெலோ, புளட் ஆகிய கட்சிகள் கருத்து மோதல்களில் ஈடுபட்டு வருகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது. இவர்கள் நடந்து முடிந்துள்ள தேர்தலில் தமிழ் மக்கள் புகட்டியுள்ள பாடத்தை சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

தேர்தல் முடிவுற்ற கையோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் திருகோணமலையில் வைத்து தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் இங்கு குறிப்பிட வேண்டும். 20 ஆசனங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட்டமைப்பிற்கு ஒன்பது ஆசனங்களே கிடைத்துள்ளன என்றும், இம்முறை இடம்பெற்ற தேர்தலை ஒரு ஜனநாயக தேர்தலாகத் தான் கருதவில்லை என்றும், மக்களுக்கு பணம் வழங்கி, மதுபானம் வழங்கி ஆளும் கட்சியினர் ஆசனங்களைப் பெற்றுப் கொண்டுள்ளனர். தமிழ் வாக்குகளைப் பிரித்துள்ளனர் என்றும் கூறியிருக்கின்றார்.

இதன்மூலம், முதிர்ந்த தலைவரான சம்பந்தன் கூட தங்கள் தரப்பு தவறுகளை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. பணத்திற்கும், மதுபானத்திற்கு விலை போனவர்களாகத் தமிழ் மக்களை அவர் கருதுவதும் கண்டிக்கத்தக்கது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை மறுசீரமைத்து அக்கட்சியை பலப்படுத்துவதானால், அக்கட்சியை முதலில் பதிவு செய்ய வேண்டும், அதற்குள் உள்வாங்கப்படும் கட்சிகளுக்கு சமமான உரிமை வழங்கப்படல் வேண்டும். கூட்டுத் தலைமை, கூட்டு முடிவுகள் என்பன முக்கியமானதாக அமைய வேண்டும் தனிநபர் ஆதிக்கம் இல்லாமல் செய்யப்

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)



# இலங்கையின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

உறுதியுடன் தெரிவிக்கிறேன்" என பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி ஏற்ற பின்னர் தெரிவித்தார். மஹிந்த ராஜபக்ச இலங்கையின் 28ஆவது பிரதமர் ஆவார்



தமிழர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் பதிவான வாக்குகளின் விவரத்தை அருகில் உள்ள அட்டவணை யில் பார்க்கவும். இவ் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் யாழ்ப்பாணம் மாவட்டத் திலேயே மிகக்குறைவான(68.9%) வாக்காளர் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 64.4% வாக்காளர் 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு மூன்று பேரும், அகில



இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஒருவரும், தமிழ்மக்கள் தேசிய கூட்டணியின் சார்பில் ஒருவரும் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஒருவருமாக ஏழுபேர் தெரிவாகி யிருந்தனர். அவர்களுடைய பெயரும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளும் தரப்பட்டுள்ளன.

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் | | | |
| 1. ITAK | 112,967 | 31.46% | 3 |
| 2. AITC | 55,303 | 15.43% | 1 |
| 3. SLFP | 49,373 | 13.75% | 1 |
| 4. EPDP | 45,797 | 12.75% | 1 |
| 5. TMTK | 35,927 | 10.00% | 1 |
| 6. All Others | 59,803 | 16.67% | 0 |
| Total Valid Votes: | 359,180 | | |
| Rejected Votes: | 35,006 | | |
| Total Polled: | 394,126 | 68.92% | |
| Total Electors: | 571,848 | | |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| அம்பாறை (திகாமடுல்ல) தேர்தல் மாவட்டம் | | | |
| 1. SLPP | 126,012 | 32.85% | 3 |
| 2. SJB | 102,274 | 26.90% | 2 |
| 3. ACMC | 43,319 | 11.27% | 1 |
| 4. NC | 38,911 | 10.28% | 1 |
| 5. AITM | 29,379 | 7.81% | 0 |
| 6. ITAK | 25,255 | 6.54% | 0 |
| 7. All Others | 20,847 | 5.40% | 0 |
| Total Valid Votes: | 385,997 | | |
| Rejected Votes: | 16,347 | | |
| Total Polled: | 402,344 | 78.28% | |
| Total Electors: | 513,979 | | |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| திருகோணமலை தேர்தல் மாவட்டம் | | | |
| 1. SJB | 86,394 | 40.55% | 2 |
| 2. SLPP | 68,681 | 32.25% | 1 |
| 3. ITAK | 39,570 | 18.58% | 1 |
| 4. All Others | 18,347 | 8.61% | 0 |
| Total Valid Votes: | 212,992 | | |
| Rejected Votes: | 14,125 | | |
| Total Polled: | 227,117 | 78.82% | |
| Total Electors: | 288,868 | | |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| வன்னி தேர்தல் மாவட்டம் | | | |
| 1. ITAK | 69,916 | 33.64% | 3 |
| 2. SLPP | 42,524 | 20.46% | 1 |
| 3. SJB | 37,883 | 18.23% | 1 |
| 4. EPDP | 11,310 | 5.44% | 1 |
| 5. All Others | 46,204 | 22.23% | 0 |
| Total Valid Votes: | 207,837 | | |
| Rejected Votes: | 17,019 | | |
| Total Polled: | 224,856 | 78.34% | |
| Total Electors: | 287,024 | | |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் | | | |
| 1. ITAK | 79,460 | 26.66% | 2 |
| 2. TMVP | 67,692 | 22.71% | 1 |
| 3. SLMC | 34,428 | 11.55% | 1 |
| 4. SLPP | 33,424 | 11.22% | 1 |
| 5. UPA | 31,054 | 10.42% | 0 |
| 6. SJB | 28,362 | 9.52% | 0 |
| 7. All Others | 23,592 | 7.92% | 0 |
| Total Valid Votes: | 298,012 | | |
| Rejected Votes: | 16,838 | | |
| Total Polled: | 314,850 | 76.94% | |
| Total Electors: | 409,808 | | |

வன்னி தேர்தல் மாவட்டத்தில் தெரிவான வர்களுடைய பெயர்களும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளும்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டத்திலும் தெரிவான வர்களை விட தேசியப் பட்டியல் மூலம் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிற்கும் ஒவ்வொரு உறுப்பினர் வழங்கப்பட்டனர். அதற்கு இலங்கை தமிழரசுக் கட்சியில் இருந்து அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தவராசா கலையரசன் மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இருந்து செல்வராஜா கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஒகஸ்ற் 12இல் கண்டி ஸ்ரீ தலதாமாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவ மண்டபத்தில் பதவிப்பிரமாணம் செய்தனர்.

கௌரவ டக்ளஸ் தேவானந்தா கடற்தொழில் அமைச்சராகவும், கௌரவ சதாசிவம் வியாழேந்திரன் தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகவிய லாளர்கள் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும், கௌரவ ஜீவன் தொண்டமான் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துள்ளனர்.

இவர்களுடன் திரு. அங்கஜன் ராமநாதன், திரு. டக்ளஸ் தேவானந்தா, திரு. கே. திலீபன் ஆகியோர் முறையே யாழ்




பாணம், கிளிநொச்சி வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாகவும், திரு. கே. காதர் மஸ்தான் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகவும் பதவிப்பிரமாணம் செய்துள்ளனர்.

இதில் பிரதமர் உட்பட 25 பேர் அமைச்சர் களாகவும், 39 பேர் இராஜாங்க அமைச்சர் களாகவும் 23பேர் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுத் தலைவர்களாகவும் பதவிப்பிரமாணம் செய்துள்ளனர்.

| யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் விருப்பு வாக்குகளால் தெரிவானவர்கள் | கட்சி | பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 1. சிவஞானம் சிறிதரன் | ITAK | 35,884 |
| 2. மதியாபரணம் சுமந்திரன் | ITAK | 27,834 |
| 3. தர்மலிங்கம் சித்தார்த்தன் | ITAK | 23,840 |
| 4. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் | AITC | 31,658 |
| 5. டக்ளஸ் தேவானந்தா | EPDP | 32,156 |
| 6. க.வி. விக்னேஸ்வரன் | TMTK | 21,554 |
| 7. அங்கஜன் இராமநாதன் | SLFP | 36,365 |

| வன்னி தேர்தல் மாவட்டத்தில் விருப்பு வாக்குகளால் தெரிவானவர்கள் | கட்சி | பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 1. சார்ல்ஸ் நிர்மலநாதன் | ITAK | 25,668 |
| 2. செல்வம் அடைக்கலநாதன் | ITAK | 18,563 |
| 3. யோகராஜா லிங்கம் | ITAK | 15,190 |
| 4. காதர் மஸ்தான் | SLPP | 13,454 |
| 5. ரிஷாட் பதியுதீன் | SJB | 28,203 |
| 6. குலசிங்கம் திலீபன் | EPDP | 3,203 |



# சந்தர்ப்பங்கள்





ஏன் அதிகம் படித்தோம். ஏன் இத்தனை திறமைகளை வளர்த்து கொண்டோம் என்றிருக்கிறது;. திறமைக்கும் படிப்புக்கும் ஏற்ற வேலையும் கிடைக்காமல், கிடைக்கும் வேலையை மனதை சமரசம் செய்துகொண்டு இறங்கிப் பார்க்கவும் முடியாமல் வேலையில்லாப் பட்டதாரி என்ற புதிய பட்டத்தோடு எங்கிருந்து மகிழ்ச்சியாக இருப்பது? இப்படி புலம்புவோர் சிலர்.

கண்ணாடி முன்னால் நின்று தன்னையே பார்த்து படபடக்கும் அழகிய பறவையால் சிறகுகள் விரித்து எல்லையில்லா வானத்திலே பறக்க முடியுமா?!

Clean 3 bedroom bsmt apartment with a Sep. entrance, bright spacious living room & kitchen in a beautiful brick bungalow. Close to TTC, , U of T and Centennial College. Appliances: Shared washer/dryer, stove, fridge, Air Conditioner. 2 free parking available. Clients must provide: Employment letter/proof of income, first and last month's rent. Clients will sign Rental Agreement. Available immediately.

Please call **647-655-6580** from **9:00AM to 5:00PM.**

## BASEMENT FOR RENT

**KINGSTON & LAWRENCE (48 Celeste Drive)**

Basement for Rent $1,300 - Inclusive of all utilities ( Hydro,Enbridge and water)

Clean 2 bedroom bsmt apartment with a Sep. entrance, bright living room & kitchen in a beautiful brick bungalow. Close to TTC, Go Station (Guildwood), U of T and Centennial College. Appliances: Shared washer/dryer, Gas stove, fridge, Air Conditioner. One free parking available. Clients must provide: Employment letter/proof of income, first and last month's rent. Clients will sign Rental Agreement. Available immediately.

Please call **647-655-6580** from **9:00AM to 5:00PM.**

## ROOM FOR RENT

**MCCOWAN & DENISON**

Room for Rent in Markham. Close to Bus stop.
Utilities included. Avail. Immediately.

**Contact : Baskaren +1 (437) 344-1589**

**Babu : 416.522.3314 Text only**

## HOUSE FOR RENT

**48 Celeste Drive Upper level – KINGSTON & LAWRENCE**

$1,975 (Plus Utilities – Hydro, Enbridge and Water)

This beautiful brick bungalow has 3 bedrooms with a bright living room, kitchen, Deck & big backyard. Close to TTC, Go Station (Guildwood), U of T & Centennial College. Appliances: Shared washer/dryer, dishwasher, stove, fridge, Air Conditioner. 2 free parking available. Clients must provide: Employment letter/proof of income, first and last month's rent. Clients will sign Rental Agreement. Available from immediately.

Please call **647-655-6580** from **9:00AM to 5:00PM.**

## BASEMENT FOR RENT

**PHARMACY & LAWERANCE**

Recently Renovated 2 Bedroom Bsmt for rent.
Sep. entrance, Parking, laundry close to all facilities.
seniors preferred. Avil. immediately.

**contact: (416) 285 0428**

## BASEMENT FOR RENT

**MORNINGVIEW TRAIL & OLD FINCH**

2 Bedroom & 2 Washroom bsmt for rent. Separate Entrance & Separate Laundry. Near School ,Park 2 minute work TTC & daycare. Priority family or Couples. Avail. immediately.

**Contact: Suthan 416.473.4200**

## MATH TUTORING

Canadian female college professor currently teaching Math online for Grade 6, 7, 8, and 9, looking for next group of students.

Contact for complimentary evaluation at **289.988.9202**

**ajaxprivatetutor@gmail.com**

## பராமரிப்பாளர் தேவை

**14th Ave. & Markham** பகுதியில் பெண் முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Older person to be take care in house will provide housing & all amenities. Good salary as well benefit. She's 80 Years old.

Please call: **647-803-5811**

## COOK WANTED

**KNIGHTS CORNER PUB & GRILL**

**KINGSTON & WHITE ROAD**

Experienced cook wanted. Full time or Part time.

**Please call : 647.706.9251**

## ஆலய முகாமையாளர் தேவை

ரொறொன்ரோவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் ஒன்றிற்கு ஆலய முகாமையாளர் (Manager) தேவை. தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும். இருப்பிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647-762-5804**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.
Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு: **பிறேம்-647.835.5244**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள் Jey - 416.816.9011**

## TAILORING

**SCARBOROUGHஇல்**

Saree Blouses $25க்கு
தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## மணமகன் தேவை

91இல் பிறந்த (5'5") (IT manager) ஆக Mississaugaவில் பணிபுரியும், கனடாவில் பட்டம் பெற்ற Registration முறிவடைந்த (R.C) மணமகளுக்குக் கனடாவில் மணமகன் தேவை.

**Contact : 647-456-1943** (after 6 p.m)

## திருமணசேவை

திருமண
சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497**

**srisai2912@hotmail.com**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது
அழையுங்கள்.

**647.861.8240**

## பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

**24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை**



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

**416.613.1840 / 647.272.6993**

birdsilvergardens@gmail.com

**16 Birdsilvergardens, Scarborough ( Port Union & Island Road)**

## HELP WANTED

"Looking for experience serious, Line cook Chef, kitchen helper, dishwasher has availability 7 days full time or part time". Address: AFFY's PREMIUM GRILL 55 Lebovic Ave C101 Scarborough

Contact: **647-290-6992**

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!

## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

**You can relax while we take care of your investment property!**

**WATSON** PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

## FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
## WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

* **Markham - Markham / Major Mackenzie – Bsmt**
(2 Brm + 1Bath) Great Location. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit. 1 Parking **[Asking $1600/m]**

* **Markham – Markham / Major Mackenzie – Bsmt**
(1 Brm + 1 Bath) High Demand Area. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit **[Asking each- $1200/m]**

* ***Scarborough*** **– Ellesmere Rd / Military trail – Bsmt**
1 Room Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $560/m]**

***Bowmanville – Hwy 401 / Hwy 2 – Detached – House**
Furnished large home with 4 or 6 Bedroom Available For Short & Long Term Rent.**[ Call 647-913-9241]**

***House *for Sale in Jaffna* – Near Kacheri, St.johns College, Chundikuli.**High demand rental area. Well maintained house in a Land about a quarter Acre. CDN-$200,000.Clear Title. **Call Karu 416-616-7278**

***Toronto – Yonge / Eglinton – Condo Apt**
(1 Brm + 1 Bth) Perfect for Young family or Professional Close to Eglinton Station. **[Asking $1850/m]**

* **Toronto – Markham Rd / Painted post dr – Semi-detached**
(3Brm + 1 Bath) Totally Renovated.1 Parking Space. Walking distance to Ttc, Shops, Mins to 401. **[Asking $2800/m]**

* ***Brock*** **– Simcoe St / Mara St – Detached**
(4 Brm + 4 Bath) Brand New Home. Double Garage. Walking Distance To Park & School **[Asking $2300/m]**

***Scarborough – Midland / S Of Lawrance – Detached**
(4Brm + 2 Bath) Available Immediately. Close to Ttc, Subway, Go Station, Schools, Parks **[Asking- $2800/m]**

* **Toronto – Markham Rd / Painted post dr – Semi-detached**
(2 Brm + 1 Bath) Walking distance to Ttc, shops, minutes to 401, parking space available upon request. **[Asking- 1500]**

➡ வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் தேட விரும்புகிறீர்களா? அல்லது

➡ ஏற்கனவே நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டில் வாடகைப் பிரச்சனைகளின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க நம்பிக்கையான நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

➡ நீங்கள் ஏற்கனவே வாழ்ந்துவரும் சொந்த வீட்டிலிருந்தே கடனை எடுத்து வீட்டை வாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கலாம்.

இத்துறையில் எனது 32 வருட அனுபவமும் எமது (WPM) Property Managemant நிர்வாகமும்
இதை உங்களுக்கு திருப்திகரமாக செய்து தரும் என்பதை முழுதாக நம்பலாம்.


**நம்பிக்கையுடன் அழையுங்கள்: கரு கந்தையா 416.616.7278**

## MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

**யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்**



கந்தசாமி முத்துராஜா

## 2. விவசாயம்

### அ. நெற்செய்கை

ஆழியவளையின் தெற்குப் பகுதியில் நெல் விளையக்கூடியதும் தோட்டம் செய்யக் கூடியதுமான கழிநிலம் அமைந்துள்ளது. இந்தக் காணிகள் பெரும்பாலும் சம்மாட்டிமார் போன்ற பணக்காரர்களின் நிலமாகும். இந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் மாடுகளைக் கொண்டு உழுது விவசாயம் செய்வர்.

இந்த விவசாயத்தொழில் பெரும்பாலும் ஐப்பசி, கார்த்திகை முதல் மாசி, பங்குனி வரை நடைபெறும். இக்காலத்தில் கடற்கொந்தளிப்புக் காரணமாகக் கூட்டொழுங்கு அமைப்புள்ள மீன்பிடித்தொழில் நடைபெறுவதில்லை. இக்காலத்தில் மீன்பிடித் தொழிலாளர்களும், அதாவது உபரியோ, சேமிப்போ இல்லாத மீன்பிடித் தொழிலாளர் வயல் வேலை செய்வதற்குச் செல்வர். களை பிடுங்குதல், அரிவி வெட்டுதல் ஆகிய பணிகளில் இவர்கள் நாட்கூலிக்கும் அல்லது சில வேளைகளில் முழு வேலைக்குமான ஒப்பந்தம் பொருத்தத்துடன் அரிவி வெட்டில் ஈடுபடுவர். பின்னர் 'பொருத்தருவி வெட்டு' எனப்படும். அரிவி வெட்டுக்காகக் கிளிநொச்சி, பரந்தன் முதலாம் நெற்செய்கைப் பகுதிகளுக்குச் செல்வர்.

அங்கு சில கமங்களில் நாட் கூலியாக ஆறு கொத்து நெல்லும் மூன்று நேர உணவும் கொடுப்பர். இவர்கள் தங்குவதற்குக் கொட்டிலும் கட்டிக் கொடுப்பர். காலை உணவு கஞ்சியாகும். சில கமங்களில் தினக்கூலியாக எட்டுக்கொத்து நெல் கொடுப்பர். பொருத்தருவி முறையில் (ஒப்பந்தம்) ஓர் ஏக்கருக்கு இவ்வளவு தொகை எனப் பேரம்பேசி பணத்திற்காக அரிவி வெட்டுவர். கமக்காரர், தங்குமிட வசதியை மட்டும் வெட்டுக் காரருக்குக் கொடுப்பர். உழைத்து மொத்தமாகச் (தொகையாக) சேரும் பணத்தைத் தொழிலாளர் தமக்குள் சமனாகப் பங்கிடுவர்.

வெட்டிக்காய்ந்த நெற்கதிரை உயரமாகத் தூபி வடிவில் 'சூடு' வைப்பர். கூலி நெல்லுக்கு வேண்டிய நெற்கதிரை, எருத்து மாடுகளைக் கொண்டு சூடு அடித்து நெல்லாக்குவர். தாம் கூலியாகப் பெற்ற நெல் மூடைகளை மாட்டு வண்டிலில் ஏற்றிக் கொண்டுவந்து ஊரில் சேர்ப்பர். எருத்து மாடுகள் மூலம் சூடு அடிப்பதுபற்றிப் பதிற்றுப்பத்து வரி ஒன்றும் பின்வருமாறு தெரிவிக்கிறது. 'பரூஉப்பகடு உதிர்த்த மென்செந் நெல்லின்' (பதிற்.71:04)

### ஆ. தோட்டப்பயிர்ச்செய்கை

இக்கிராமத்தின் சில குடும்பங்கள் மீன்பிடி இல்லாக் காலமாகிய மாசி பங்குனியில் தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவர். நிலமுடையோர் தங்களின் நிலங்களிலும் நிலமற்றவர்கள் குத்தகையாகவும், வாரமாகவும் நிலத்தைப் பெற்று இத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவர். சிறு தோட்டப் பயிர்களான மிளகாய், வெங்காயம், கத்தரி முதலியனவற்றைப் பயிரிடுவர். சிலர் பணப்பயிராகிய புகையிலையும் பயிரிடுவர். தோட்டப் பயன்பாட்டிற்குத் தேவையான கருவிகள், பசளை முதலியனவற்றைக் கொண்டு



செல்வதற்காகவும் உற்பத்திப் பொருளைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்காகவும் ஒருசிலர் இரட்டை மாட்டு வண்டில் வைத்திருப்பர். தெற்குக் கழித்துறையில் தென்னந்தோட்டமும் உள்ளது. இதில் கிடைக்கும் தேங்காய், பொச்சு மட்டை, (தேங்காய் மட்டை) தென்னை ஓலை என்பன பலரின் சுயதேவைக்குப் போதுமானது. இவற்றைச் சிலர் பணத்துக்கும் விற்பர்.

கிராமத்தின் மத்திய தென்பகுதியில் உலாந்தா தோட்டம் எனப்படும் தோட்டம் ஒன்று உள்ளது. உலாந்தா தோட்டம் என்பது உலாந்தாவாக இருந்த ஒருவரது தோட்டமாகும். உலாந்தா என்பது யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் 'நில அளவையாளரைக்' குறிக்கும். இலங்கையில் நில அளவை முறையை முதலில் ஏற்படுத்தியோர் ஒல்லாந்தர் ஆனமையினால் (Hollanders) நில அளவையாளர்களை உலாந்தா என அழைக்கும் வழக்கம் உண்டு. ஆழியவளையின் இத்தோட்டம் பட்டினத்தைச் சேர்ந்த ஓர் உலாந்தா குடும்பத்துக்கு உரியதாகும்.

பங்குனி மாதத்தில் அரிவி வெட்டுத் தொழில் முடிவுற்றதும் சித்திரையில் கரைவலைத் தொழில் ஆரம்பமாகும். அடுத்த வருட அரிவி வெட்டுக் காலம் வரையும் இக்கிராம மக்கள் தாம் கூலியாக உழைத்த நெல்லைத் தமது உணவுத் தேவைக்காகத் தங்கள் வீடுகளில் 'வளந்து' எனப்படும் பெரிய மண்பானைகளிலும் ஈச்சந்தடியால் பின்னப்பட்ட நெற்கூடைகளிலும் (கொம்பறை) போட்டுப் பாதுகாப்பாக வைப்பர். நெல்லுக்குக்குள் பூச்சி புழுக்கள் உட்புகாதவாறு வளந்து, நெற்கூடை முதலியவற்றின் வாய்களை அடுப்புச்சாம்பலால் நிறைத்து மூடி வைப்பர். இதேபோன்று செத்தல் மிளகாயையும் பக்குவமாக மூடிவைப்பர். காற்றோட்டத்தில் தொங்கும் வெங்காயம் நீண்ட நாட்களுக்குப் பழுதாகாமல் இருக்கும் என்பதற்காகக் கொட்டில்கள் வீட்டின் தாள்வாரங்கள் ஆகியவற்றில் வெங்காயத்தைக் குலைகுலையாகக் கட்டித் தொங்க விடுவர்.

தோட்டத்தினுள், கூட்டு முயற்சியாகப் பலர் ஒன்றுசேர்த்து மண்வெட்டிகளினால் ஆழமாகத் துரவு வெட்டுவர். அதற்குள் கோயில் கேணி போன்ற அமைப்பில் மரக் குற்றிகளினால் 'சங்களை' பதிப்பர். சங்களைப் படிகளில் வேகமாக இறங்கி ஏறிப் பட்டையினால் நீரைக்கோலிப் பயிர்களுக்கு இறைப்பர். பனை, தென்னைத் துண்டுகளையே பெரும்பாலும் சங்களைக் குற்றிகளாகப் பயன்படுத்துவர்.

ஒரு ஏக்கர் நிலத்தில் சுமாராக மூன்று அல்லது நான்கு குடும்பத்தினர் சிறு தோட்டப் பயிர்களைப் பயிரிடுவர். தோட்டத்தரையை 'உழைப்புப் பரிமாற்ற' முறையில் எல்லோரும் சேர்ந்து, ஒரு நாளைக்கு ஒருவருடையது என்று முறை போட்டுத் தரை கொத்துவர். எல்லோரும் சேர்ந்து, தோட்டத்தைச் சுற்றியுள்ள நான்கு வேலிகளையும் பனை ஓலை, கருக்கு மட்டை, முள்ளுக்கொப்பு, முள் கதியால் என்பவற்றால் மிருகங்கள் தோட்டத்துள் நுழையாதவாறு பாதுகாப்பு வேலி அடைப்பர். இந்த முறைமை பெரும் பாணாற்றுப் படையில் வரும் பின்வரும் இரண்டு வரிகளை நினைவுறுத்துகின்றது.

வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படைப்பை (பெரும்: 126).
இடுமுள்வேலி எருப்படு வரைப்பு (பெரும்: 154).

பயிர்கள் வளரும்போது முறையின்படி தினம் ஒருவர் கிளி, பன்றி, குரங்கு முதலியவற்றைத் துரத்துவதற்குக் காவல் இருப்பர். பாடசாலை விடுமுறை நாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் தோட்டக்காவலில் சிறுவர் சிறுமியரும் ஈடுபடுவர்.

சொந்த நிலமற்ற மக்கள் அறுவடை செய்யப்படும் தானியத்தில் மூன்றில் ஒரு பங்கை நிலத்தின் உடைமைக்காரருக்கு வாரமாகக் கொடுப்பர். இது ஒரு தேச வழமை மரபாகும். தோட்டங்களில் பயிர் செய்வோர் வாரப்பங்கு கொடுத்தபின் எஞ்சியதில் சுயதேவைக்கேற்ப வைத்துக் கொண்டு மிகுதியைச் சந்தைப்படுத்துவர்.

தொடரும்...

# நோய்களுக்கான சிகிச்சை முறை

**Yoga Therapy For Diseases**

உலகில் நாம் பிறக்கின்றோம், வாழ்கின்றோம், இறக்கின்றோம். வாழும் காலத்தில் எங்களுக்கு உறவு சொந்தங்கள் அவசியமாகின்றது. எவரும் பிறக்கும்போது ஒன்றும் இவ்வுலகிற்கு கொண்டு வருவதில்லை. அதேபோல் இறக்கும்போது கொண்டும் போவதுமில்லை. இவ்வுலக சமுதாயம்தான் ஒவ்வொருவருக்கும் வாழ்வளித்து வருகின்றது. அப்படியான சமுதாயத்திற்கு அவன் தனது அறிவாற்றல், உடல் ஆற்றல் இரண்டின் மூலம் கடன் செலுத்த வேண்டும்.

அப்படியாக நடந்து கொண்டால் அப்போது மனித சமுதாயம் வளமுற்று இருக்கும். இதற்கு அடிப்படைத் தேவையான உடல், மன ஆரோக்கியத்தை அளிப்பது பண்டைய யோகிகள் அளித்த யோகப் பயிற்சி முறைகளே.

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்” என்கிறார் திருமூலர். வாழ்க்கையின் மூலதனமே ஆரோக்கியம். ஆரோக்கியம் இழந்த மனிதன் நடைப்பிணமாகின்றான். மனிதன் ஆரோக்கியத்திற்கு, எப்போ யோகசன தியானப்பயிற்சிகளுக்கு முதலிடம் கொடுக்கிறானோ அப்போதுதான் மனிதன் விமோசனம் அடைகின்றான்.

மருந்தில்லா அரிய மருத்துவ முறையான இந்த யோகா தெய்வீக கலையை கற்று அதன்படி நடந்து அனைவரும் நோயற்ற வாழ்வு வாழவேண்டுமென்பதே எமது குறிக்கோள்.

யோகாப் பயிற்சி ஒரு மதத்திற்கு சொந்தமானது என்கின்றனர். ஆனால் அது உண்மையல்ல. அது சாதி, மதம், கடந்தது. மனிதனுக்கு யோகாப் பயிற்சி தேவை. அது மக்கள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான பயிற்சியாகும். யோகாப் பயிற்சியும் சித்த மருத்துவமும்தான் நோயை முழுமையாக குணப்படுத்தக்கூடியது.

“நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் சொல்” என்பது வள்ளுவர் வாக்கு.



நோய்களை யோகாசனம் மூலம் குணப்படுத்துவதே யோகா சிகிச்சை முறை (Yoga Therapy). இந்த முறையை ஒரு யோகா சிகிச்சை நிபுணரிடம் (Yoga Therapy consultant) முறையாகக் கற்றுக் கொண்டால் எமக்கு நாமே யோகாசனப் பயிற்சியின் மூலம் சிகிச்சை செய்து கொள்ளலாம்.

உடலில் ஏற்படும் வியாதிகளுக்கு 90 சதவீத காரணம் மனமே என்றும் 80சதவீத நோய்களுக்கு மருந்துகள் தேவையில்லை என்றும் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. உடலுக்கும் மனதுக்கும் நேரடியாகத் தொடர்பு உள்ளது. அதனால் மனதளவில் ஏற்படும் மாற்றங்கள் உடலிலும் ஏற்பட்டு நோய்களை வரச்செய்கின்றது.

முறையான யோகாப் பயிற்சிகளை தகுந்த ஒரு யோகா சிகிச்சை நிபுணர் (Yoga Therapy Consultant) அல்லது ஒரு யோகா ஆசிரியர் மூலம் பயின்று அவர்கள் உதவியுடன் தமக்குத் தாமே யோகா முறையில் சிகிச்சை செய்து நோய்களில் இருந்து உடலை சீர் செய்து கொள்ளலாம். அல்லது உடம்பில் நோய்கள் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம். எப்படியும் யோகாவை ஆரம்பத்தில் ஒரு யோகா ஆசிரியரிடம் கற்று அதன்பின் பயிற்சியில் ஈடுபடவேண்டும்

# செல்வி என்ற நர்ஸக்கா - சிறுகதை

**நி. அமிருதீன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ் ஆய்வுத்துறை, திருச்சி

எம்மா இன்னிக்கி லீவு போட்டு வீட்ல இருமா

முடியாதும்மா; நிறைய கொரோனா பேசன்ட் இருக்காங்க

இன்னிக்கு ஒரு நாள் இந்த அம்மாவுக்காக லீவு போட்டுமா

முடியாதும்மா

இந்த அம்மாவுக்கு ஏதாவது ஆச்சுன்னா, தப்பு தப்பா பேசாத மா உனக்கு உடம்புக்கு ஒன்னும் இல்ல. கொஞ்சம் பிபி தான் அதிகமா இருக்கு. அப்படி உனக்கு ஏதாவது ஒன்னு ஆனாலும் இங்க ஒரு உசுரு, அங்க 18 உசுரு. எனக்கு அவங்கதான் ரொம்ப முக்கியம். வேளாவேளைக்கு கரெக்டா மாத்திரை போட்டுக்கோ. அடுப்பில் பால் சூடு பண்ணி வச்சிருக்கேன் எடுத்து குடிச்சுக்கோ. இட்லி போட்டு வச்சிருக்கேன் பால் தொட்டு சாப்பிட்டுக்கோ. நான் காலையில எட்டு மணிக்கு வந்துருவேன். பத்திரமா இரு, போயிட்டு வரேன்மா... என்றவாறு அம்மாவை திரும்பிக்கூட பார்க்காமல் செல்வி தனது ஸ்கூட்டரை கிளப்பினாள்.

ஸ்கூட்டர் மெயின் ரோட்டில் வேகமாக பறந்தது. அவள் மனமும் அம்மா ஞாபகத்தில் மூழ்கியது. நெஜமாவே அம்மாவுக்கு ஏதாவது ஆயிடுமா? சேச்சே அப்படி எல்லாம் ஆகாது, அம்மா என்னை எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வளத்தாங்க... அவளின் எண்ணங்கள் இருபது வருடங்களுக்கு முன் நடந்தவற்றை அசை போட்டுக் கொண்டிருந்தது.

செல்வி பெயருக்கேற்றபடி செல்வி ஆகவே இருந்தாள் திருமணம் ஆகியும் கூட. திருமணம் முடிந்து முதலிரவில் கணவன் குடித்துவிட்டு வந்து கலாட்டா செய்யவே, பெரிய சண்டையாகி இரவோடு இரவாக தாய் வீட்டுக்கு வந்துவிட்டாள் செல்வி. பலர் சமரசம் பேசினர். எதுவும் உடன்படவில்லை. பிறகு கணவன் இவளை பார்த்து ஒரு வார்த்தையை வீசினான். வெகுண்ட இவள் தாலியை கழட்டி சபை முன்னால் வீசிவிட்டு வந்தவள், இன்றுவரை திருமணத்தைப் பற்றி யோசிக்கவே இல்லை. அப்படியே அவளைப் பார்த்து அவன் என்ன சொன்னான் தெரியுமா? பொட்டச்சிக்கு படிச்ச திமிரு... அதான் நடுராத்திரியில கட்டுன புருஷன விட்டுட்டு ஓடி போய்ட்டா ஓடுகாலி. இந்த பேச்சு அவள் காதில் நெடு நாட்கள் வரை ஒலித்துக்கொண்டே இருந்தது. பெண்களைப் படிக்க வைப்பார்களாம், பிறகு ஏன் படித்தாய்? படித்த திமிர் என்பார்களாம்... இந்த சமூகம் ஏன் இப்படி இருக்கிறது என்று எண்ணிக் கொள்வாள் செல்வி. 12ஆம் வகுப்பு முடிக்கும் போது அவளின் தந்தை மாரடைப்பால் மாண்டு போனார். அடுத்து கல்லூரிக் கனவுகளோடு காத்திருந்த செல்விக்கு அது பேரிடியாக இருந்தது. செல்வியின் தாய் வீட்டு வேலை செய்யப் போகும் இடத்தில் ஒரு பெண்மணி நர்சிங் கல்லூரியில் பேராசிரியையாக பணிபுரிந்து வந்தார். அவர் செல்வியின் நிலைமையைக் கண்டு அவளை நர்சிங் படிக்க வைத்தார்.

படிப்பு முடிந்து வேலைக்கு கிளம்பும் முன் அவளுக்கு ஒரு திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று அவளுடைய தாய் ஒரு புரோக்கரை பிடிக்க, அவனும் குடிகாரனை நல்ல மாப்பிள்ளை என்று செல்வி தலையில் கட்டிவிட்டான். பிறகு நடந்தது தான் உங்களுக்கு தெரியும். ஊர் ஆயிரம் பேசும். ஆனாலும் நம் வாழ்க்கையை வாழ்வது நாம்தான் என்று எண்ணிய செல்வி உடனடியாகப் பக்கத்து ஊரில் ஒரு மருத்துவமனையில் நர்சாகப் பணியில் சேர்ந்தாள்.

சில நாட்களில் வீட்டையும் அருகிலேயே குடி மாற்றினாள். புதிய மக்கள் புதிய வேலை கவலைகளை மறந்து நோயாளிகளுக்கு சிகிச்சை செய்ய ஆரம்பித்தாள். கிட்டதட்ட மூன்று வருடங்கள் கழிந்து இருக்கும். அரசு வேலைக்காக விண்ணப்பம் இட இவளது மதிப்பெண்களுக்கு வேலை எளிதாகக் கிடைத்து விட்டது. இப்போது பெருந்துறை அரசு மருத்துவமனையில் செவிலியர். அருகிலேயே தங்குவதற்கு அரசு விடுதி என வாழ்க்கையே மாறிவிட்டது.

தாய் எப்போது திருமணப் பேச்சு எடுத்தாலும் எனக்கு திருமணமே வேண்டாம். உனக்கு நான் எனக்கு நீ அவ்வளவு தான் என் வாழ்க்கை என்று சொல்லிவிட்டுப் பேச்சை முடித்துக் கொள்வாள். ஒரு ஐந்தாறு வருடங்கள் ஓட அழகு நகரில் 2 சென்ட் இடம் வாங்கி சொந்தமாக வீடு கட்டிவிட்டாள். அந்த அழகு நகர் ஒரு மிடில்கிளாஸ் ஏரியா. இரண்டே தெருக்கள். அதில் 30 வீடுகள். அனைவரும் நர்ஸ்க்கா நர்ஸக்கா என்று செல்வியிடம் அன்பாக பழகினர்.

செல்வியும் அவர்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனைகளை அவ்வப்போது தந்துகொண்டே இருப்பாள். அந்தத் தெருவில் செல்வி என்று சொன்னால் யாருக்கும் தெரியாது. நர்ஸ் அக்கா என்று சொன்னால் சின்ன பையன் கூட செல்வியை அடையாளம் காட்டி விடுவான். இப்படியாக செல்வி உடைய வாழ்க்கை போய்க்கொண்டிருக்க திடீரென்று ஒரு நாள் செல்வியின் தாய் மயங்கி விழுந்தாள். தீவிர பரிசோதனைக்கு பிறகு ரத்த அழுத்தம் சர்க்கரை போன்ற உபாதைகளால் இனி காலத்திற்கும் மருந்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும் என்று கூறிவிட்டனர். எனவே தாய் ஓய்வெடுக்க ஆரம்பித்துவிட்டாள்.



எங்கோ புறப்பட்ட கொரோனா இந்தியாவிலும் வந்துவிட இவள் மருத்துவமனையிலும் 18 நோயாளிகள். அனைவருக்கும் இன்று பரிசோதனை முடிவு வரப்போகிறது. நெகட்டிவ் என வந்துவிட்டால் நாளை முதல் இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு அம்மா பக்கத்தில் இருக்கலாம் என்ற சிந்தனையை கலைத்துக் கொண்டு மருத்துவமனைக்குள் சென்றாள் செல்வி.

வேகமாக தன்னுடைய அறைக்குள் சென்று கொரோனா நோய் பாதுகாப்பு உடையை அணிந்து கொண்டு வார்டுக்குள் சென்றாள். நோயாளிகளுக்கு மையமாக நின்று சத்தமாகப் பேச ஆரம்பித்தாள். மாலை உங்களுக்கு ரிசல்ட் வந்துவிடும். கண்டிப்பாக உங்களுக்கு கொரோனா நோய் இருக்காது. நீங்கள் நிம்மதியாக இருங்கள். நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள் என்று அவர்களை உற்சாகமூட்டினாள். அனைவரும் எப்போது மாலை நேரமாகும் என கடிகாரத்தை பார்த்தவாறே நேரத்தை கழித்துக் கொண்டிருந்தனர்.

மாலை 5 மணி ரிசல்ட் குறித்த இமெயிலை பிரிண்ட் அவுட் ஆக பிரிண்டர் வெளியே துப்பியது. அதை கையில் எடுத்துப் பார்த்த செல்விக்கு அவ்வளவு மகிழ்ச்சி. 18 பேருக்கும் கொரோனா நோயில்லை. வேகமாக தாளை எடுத்துக் கொண்டு வார்டுக்குள் நுழைய முற்பட்ட வேளை அவளுடைய செல்போன் அழைத்தது எடுத்துப் பார்த்தாள். பக்கத்து வீட்டு மாமி நம்பர். உடனே ஏதோ ஆகி விட்டது என நினைத்து போனைஆன் செய்தாள்.

செல்வி... உங்க அம்மா...

தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார் மாமி. செல்விக்கு எல்லாம் புரிந்துவிட்டது. கண்களில் கண்ணீரோடு வார்டுக்குள் நுழைந்து நோயாளிகளை பார்த்து, உங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. உங்களில் யாருக்கும் கொரோனா இல்லை என்ற முடிவு வந்துள்ளது. இவ்வளவு நாள் நாம் பட்ட சிரமத்திற்குப் பதில் கிடைத்துவிட்டது என்று சொல்லிவிட்டு அழ ஆரம்பித்தாள். நோயாளிகள் அனைவரும் எண்ணிக் கொண்டார்கள் இது நர்சின் ஆனந்தக் கண்ணீர் என்று. ஆனால் அவளுக்கு மட்டும்தான் தெரியும் இது தாய் இறந்ததினால் வந்த கவலையின் கண்ணீர். கடைசி நேரத்தில் தாயுடன் இருக்க முடியவில்லையே என்ற வேதனையின் கண்ணீர். செல்வி கொரோனாவை வென்றுவிட்டாள். ஆனால் தாயை இழந்து விட்டாள்... வாழ்க செவிலியர்களின் தியாகம்.

## வேர்விட்டுத் துளிர்க்குமோ? பேர் கெட்டுக் கருகுமோ?

மதிநலமற்றோர் கையில் அதிகாரமெனும்
'மந்திரக்கோல்' மீண்டும் சிக்கிக்கொண்டதே
அதிசயமிதில் ஏதுமில்லை அரசியலில்
அரைத்த மாவையே மீண்டும் அரைப்பது
புதிதான விஷயமாவென்ன? ஆனாலும்
புளித்த மாவை அரைத்துப் புண்ணியமென்ன?
கொதித்த நீரின் வெப்பம் சிறுபொழுதில்
கொதிப்படங்கி மீண்டுமது ஆறிவிடும்!


பஞ்சம் பசி பட்டினிதான் இனியும் தொடரும்
பவுசுக்கு நடத்தி முடித்துத் தேர்தலை
நெஞ்சம் குளிர்ந்து மீண்டும் ஆட்சிபீடம்
நேர்மையாய் அடைந்தோமெனக்கூறி அதிகார
மஞ்சத்தில் ஏறிக்கொண்டார் பாவம்
மக்களினி என்னபாடு படப்போகிறார்களோ?
கொஞ்சமேனுமவர்க்கு நிம்மதிதான் கிட்டுமோ?
கொடுந்துயரம்தான் வந்து கதவை தட்டுமோ?

அண்ணா ஆட்சியில் அனைத்தையுமிழந்து
அகதிகளாகி தமிழகமுகாம்களில் வாழ்வோர்
எண்ணிக்கை பெருமளவில் குறையவுமில்லை
ஏக்கங்கள் தொலைந்தவர்கள் ஏகவுமில்லை
கண்ணியத்தோ டவர்கள் பிறந்தமண்ணில்
காலூன்றிவாழ வழியின்னும் பிறக்கவுமில்லை

புண்ணியபாவங்கள் பலவுண்டு தமிழர்க்கு
பாவத்தைத் தொலைப்பாரோ? தொடர்வாரோ?
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வெனும்
ஒப்பிலா மந்திரத்தை ஏன் மறந்தோம்?
இன்றும் தமிழர்க்குள் பிளவுகள் பிரச்சினைகள்
இத்தனை இடர்களை அனுபவித்தும்
ஒன்றுபடும் எண்ணமது ஜனிக்கவேயில்லை
ஒட்டுமொத்த தமிழினமும் ஒருகுடைக்கீழ்
நின்றுவிட்டால் போதுமிங்கு நாம்விரும்பும்
நிம்மதியும் உரிமைகளும் கிட்டிவிடும்!

தேர்தல்கள் வரும்போதும் ஆனாலெங்கள்
தேசத்தை தாங்கிப்பிடிக்க கைகள் வேண்டும்
ஆர்வத்தைத் தூண்டிநிற்கும் தேர்தல்களை
ஆற்றலோடும் அறிவோடும் சந்தித்தால்
சீர்கெட்டுக் கிடக்கும் தமிழர் வாழ்வில்
சிறப்பான நல்லமைதி வந்து சேரும்
பார்போற்ற வாழ்ந்த தமிழினமிங்கு
வேர்விட்டுத் துளிர்க்குமோ? பேர் கெட்டுக் கருகுமோ?

05.08.2020 இல் நடந்து முடிந்த இலங்கை தேர்தலின் பின்



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்




# யோகா சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல் சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# Just Mercy - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

1986 நொவம்பரில் அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் ஒரு 18 வயது வெள்ளை இனப்பெண் கொலை செய்யப்பட்டாள். பல மாதங்களாகக் கொலைகாரரைத் தேடிய காவல்துறை ஒருவரையும் கைது செய்யவில்லை.

வேறு ஒரு குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட ஒருவரது வாக்குமூலத்தால் அப்பெண்ணைக் கொலை செய்தவர் என ஆபிரிக்க அமெரிக்கரான Walter McMillian கைது செய்யப்படுகிறார். இந்த உண்மைச் சம்பவத்துடன் தான் இப்படம் தொடங்குகிறது.

Just Mercy படம் அலபாமாவில் நடைபெற்ற உண்மையான கதை. இப்படம் Bryan Stevenson என்ற ஆபிரிக்க அமெரிக்க சட்டத்தரணி எழுதிய தனது கதையான புத்தகத்தை வைத்து எடுக்கப் பட்டது. இப் புத்தகத்தின் கதாபாத்திரமான Bryan தான் இப்படத்தின் கதாநாயகனாக இருக்கிறார். ஆர்வமும் தன்நம்பிக்கையும் நிறைந்த பட்டதாரியான Bryan, Harvard பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்ற வுடன் அலபாமாவிற்கு வேலை பார்க்கச் செல்கிறார். அக்காலத்தில் அது இனவெறி கூடிய மாநிலமாகக் கருதப்பட்டது.


இதைச் சரி செய்ய விரும்பும் Bryan, அலபாமாவில் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளுக்கு இலவச சேவைகளைச் செய்யும் ஒரு தொண்டு நிறுவனத்தில் தனது வேலையைத் தொடங்குகிறார். இவ்வாறே Bryanஉம் Walterஉம் சந்திக்கின்றனர்.



Walterஇன் உண்மைக் கதை என்ன? அவரை Bryan காப்பாற்றுவாரா? என்பது மீதிக் கதை. படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படம் Walterஇன் உண்மைக் கதையை மிகவும் கவனமாக மிகச்சில மாற்றங்களுடன் பின்பற்றிச் செல்கிறது. கதாபாத்திரங்கள் உண்மையானவர்களுக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்டு நடிக்கப்பட்டுள்ளன. எனவே பார்க்கும்போது அக்காலத்து அமெரிக்காவின் அநியாயங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

Walter, தனது முதல் சட்டத்தரணியால் கைவிடப்பட்ட நிலையில் Bryan உடன் பழக விரும்பவில்லை. ஆனால் Bryan மற்றைய கைதிகளுடனும் தனது குடும்பத்துடனும் பழகும் போது காட்டும் மரியாதையும் ஆர்வத்தையும் கண்டு கொஞ்சம் கொஞ்சமாக Bryan மீது Walter நம்பிக்கை கொள்கிறார். Bryanஉம் பார்வையாளர்களும் இவ்வாறே Walter இன் கதையைப் பற்றி மெதுவாக அறிகின்றனர். அவருக்கு நடந்த சட்ட விரோதமான மற்றும் நியாயமற்ற செயல்களைக் கண்டு ஆச்சரியமும்



கவலையும் அடைகின்றனர்.

உதாரணத்திற்கு அவருக்குச் சாதகமான சாட்சிகளைத் தவிர்த்து விசாரணைகள் நடத்துவது, Walterஇற்கு விசாரணை நடக்கும் முன்பே தூக்குத் தண்டனை விதிக்கப்படுவது, அத்தோடு அவரைச் சம்பவம் நடந்த பெரும்பாலான ஆபிரிக்க அமெரிக்கர்கள் வாழும் இட நீதி மன்றத்திலிருந்து பெரும்பாலான வெள்ளை இனத்தவர்கள் வாழும் இடத்தின் நீதி மன்றத்திற்கு மாற்றி Walterஇற்கு எதிராக jury மாரையும் வெள்ளையினத்தவர்களா கத் தெரிவு செய்தது, என்பன வற்றைக் கூறலாம்.

இவற்றைவிட இன்னும் பல அநியாயங்கள் இந்த வழக்கில் நடைபெற்றன. இவை என்ன எனவும் இவற்றையெல்லாம் எவ்வாறு அடையாளம் கண்டு வேறுபல இனவெறிச் சம்பவங்களை எதிர்த்து Bryan போராடியுள்ளார் என்பதையும், அந்தப் பெண்ணைக் கொலை செய்தது யார் என்றும் அவர் கைதுசெய்யப்பட்டாரா என்றும் படத்தைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

1986இல்கூட அமெரிக்காவில் இனவெறி எவ்வளவு மோசமாக இருந்தது எனவும் அதற்கு அரச அதிகாரவர்க்கம் எவ்வாறு உடந்தையாக இருந்தது என்பதை அறியவும் எல்லோரும் பார்க்கவேண்டிய படம் இது.

# அத்தை மகள்



வானுயர வளர்ந்த கொடிகள்
வண்ண மலர் பூக்கள் குலுங்க
கண் கொள்ளா காட்சியாக
கண்டு அதனை ரசிக்க
பருவ மங்கை ஒருத்தி
பாதம் படாமல் நடந்து வர
பூத்து குலுங்கும் பூக்கள் நடுவே
புகுந்து வரும் வேளையிலே
என்னைக் கண்ட பருவ மங்கை
எடுத்தாள் ஓட்டம் கொடிகளிடையே
கொடிகளைக் கண்ட நான், அவளின்,
கொடியிடையைக் கண்டேன்
பூக்களைக் கண்ட நான், அவளின்
பூ முகத்தைக் கண்டேன்.
பார்த்ததும் பதிந்தது மனதில்
பட, படவென்று அடித்தது நெஞ்சில்
துடித்தது மனது மட்டும்,
துரத்திப் பிடிக்க வேண்டுமென்று
மனதை மாற்றிக்கொண்டு,
மறுபடி திரும்பி விட்டேன்.
வீடு வந்து சேர்ந்து விட்டு,
விட்டத்தை பார்த்துக் கொண்டு,
கண்ணை மூடிக் கனவு கண்டேன்,
கள்ளி, அவள் கண்முன் நின்றாள்.
கண்ணை கசக்கி திரும்பி பார்த்தேன்,
க்ளுக்கென்று சிரித்து அறையினில் மறைந்தாள்.
அன்னையை அழைத்து, யாரவள் என்றேன்,
அத்தை மகள் என்று அதிரச்செய்தார்.
பருத்தி செடியோ பஞ்சாய் காய்க்கும்,
புடவையாய் காய்த்ததில் பூரிப்படைந்தேன்.

வெற்றிவேல் செழியன் - துபாய்.

# இலவுகாத்த கிளியானோம்

கட்டுக் கோப்பாய்க் கால மெல்லாம்
கண்களைப்போல் காக்கப்பட்ட கட்சி யின்று
விட்டதே கோட்டைகளை மாற்றா ரிடமே
விடியலைத் தேடிநின்றோர் விரக்தி யுற்றார்
கட்டமைப்பு இல்லாத கார ணத்தால்
கண்டோமே இழப்பதனைக் கண்முன் னாலே
முட்டவரும் மொட்டெதிரே முனைப்பாய் நிற்க
முறையான தலைவர்கள் முன்வரு வாரோ.

சுயநல வாதிகளின் சூழ்ச்சி யாலே
சூழ்ந்திருந்த இருளதனைத் தீர்ப்ப தெப்போ
மயக்கமுறு தலைவர்களே மாயை விட்டு
மக்களுக்காய் வாழ்வதெப்போ மனித நேய
இயக்குனர்கள் தலைமையேற்றால் இலக்கு மாறும்
ஏற்றநற் றொண்டர்கள் ஏற்றுக் கொண்டால்
தயக்கமின்றி மீண்டெழுவோம் தலைமை மாற்றம்
தப்பின்றி மாறிவிட்டால் தலைநி மிர்வோம்.

பொறுத்திருப்போம் பொறுமை காப்போம் போலிகளைப்
பொய்யர்களை இனங்காண்போம் பொறுப்பு வாய்ந்தோர்
உறுதியுடன் பதவியேற்று ஊக்கமுடன் செயற்பட
ஊராரும் ஒன்றுசேர்வர் உண்மை யிது
இறைமைக்காய்ப் போராடி இறுதிவரை வாழ்ந்தோம்
இனவழிப்பால் சொந்தங்கள் இறந்தொ ழிந்தார்.
மறந்தோமே எல்லாமே மாசைஎன் செய்வோம்.

தேசியக் கட்சிகள் பச்சை நீலம்
தேசத்தை விட்டகன்ற செய்தி கேட்ட ம்
பாசி படர்ந்ததனால் பழமை வேண்டா
பக்குவமாய் அகற்றினரே மக்கள் அங்கே
போசிப்போம் என்றுபல பொய்கள் சொல்லி
போரிலே வென்றதனைப் பெருமை யாக
ஆசைகாட்டி பெற்றனரே ஐயமின்றி வாக்கதனை
அள்ளிக்கொண்டார், மொட்டாரின் ஆட்சி பார்ப்போம்.

வடகிழக்கு ஒன்றிணைய வடிவமைத்த தமிழரசை
வாழ்தமிழர் ஏற்றனரே வீட்டைச் சின்னமாய்
அடலேறு தலைவரின் ஆழ்ந்த சிந்தனை
ஆரம்ப மானதே தமிழரசுக் கட்சி
திடமான கொள்கையுடன் தீர்க்க சிந்தனை
தீர்வுக்காய்ப் பேச்சுவார்த்தை பண்டாசெல்வா ஒப்பந்தம்
புடம்போட்ட தங்கங்கள் போற்றி வளர்த்ததனை
போற்றியே காக்க முடிய லையே!

முருகேசு மயில்வாகனன்

# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent Lic# M12002440
info@mortgagesolutions.ca
www.MortgageSolutions.ca
Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


## 416.298.2777

## $375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J டெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்